CC.No.110/2020

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.10.2025**

**அ.சா. –1**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர்**

**பெயர் – பணக்காரசி (65) க/பெ. பெருமாள் , தையூர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் காவலர்கள் சொல்லிகொடுத்ததன் பேரில் சாட்சியமாக அளித்தேன் என்றால் சரிதான். சம்பவத்தன்று யார் என்னையும், எனது மகன் சசிகுமார் என்பவரையும் தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், அப்போது இருட்டாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்பது எனக்கு தெரியவில்லை என்றாலும் சரிதான். சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

நானும் எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். எனவே உண்மை சம்பவத்தை காவலர்கள் விசாரணையின்போதும், முதல் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.110/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : **சசிகுமார்** |
| Father's Name/ Husband's Name | : **பெருமாள்** |
| Village & Taluk | : **தையூர்** |
| Calling | : விவசாயம் |
| Age | : **(42)** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.10.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 பணக்காரசி எனது அம்மா, பட்டியல் சாட்சி2 குருநாதன் எனது ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் இரவு வேலையில் எங்கள் ஊரில் உள்ள கோவில்திருவிழாவிற்காக light அமைத்திருந்தேன் இது சம்பந்தமாக முன் விரோதத்தில் நானும், குருநாதன் என்பவரும் எங்கள் வீட்டின் அருகே இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வந்து எங்களை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டனர். எதிரிகள் எங்களை தாக்கவில்லை. இது சம்பந்தமாக எனது தாய் செஞ்சி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். கடந்த 21.07.2019 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், எனது அம்மா ஆகியோரும் மாயக்கண்ணன் என்பவரின் வீட்டின் அருகே நடந்துசென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. அப்போது எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் லைட் செட்டிங் தொடர்பான முன் விரோதத்தில் ஆஜர் எதிரிகள் எங்களை திட்டி தாக்கினார்கள் என்றால் இல்லை. நானும், எதிரிகளும் தற்போது

சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.